**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ஆம் நாள் திங்கட்கிழமை

STC. No. 390 of 2025

CNR No. TNTV15-001501 -2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 1624/2020 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

1. கோகுல், 25/2026,
த/பெ. சண்முகம்,
மேலத் தெரு,
செம்மங்குடி.
2. சூர்யா(எ)சூர்யபிரகாஷ், 23/2026,
த/பெ. சண்முகம்,
மேலத் தெரு,
செம்மங்குடி. ------ எதிரிகள்

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Summary Trial Case (S.T.C) No.390 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub-Inspector of Police, Kodavasal PS. in |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:13 +0530

<table>
<tr><td></td><td></td><td colspan="3">Cr.No.1624/2020</td></tr>
<tr><td>3.</td><td>Name of the accused</td><td colspan="3">1. S. Gokul<br>2. S. Surya @ Suryaprakash</td></tr>
<tr><td>4.</td><td>Father’s Name</td><td colspan="3">S/o. Shanmugam<br>S/o. Shanmugam</td></tr>
<tr><td>5.</td><td>Occupation</td><td colspan="3">-</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">A1 and A2- Mela Theru, Semmangudi</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">25/2026<br>23/2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">14.09.2020</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">15.09.2020<br>15.09.2020</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">-</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">-</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">23.03.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 23.03.2026 the accused questioned on substance of accusationU/s.294(b),352,506(1) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="5">15</td><td rowspan="5">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>24.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>24.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>24.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>26.03.26</td><td>26.03.26</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:18 +0530

| | | |
|---|---|---|
| 16. | The date of examination of the accused under section 313 of the code – Closed of trial | 26.03.2026 |
| 17. | Sentence on order | முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 294(b),352,506(1) இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி. R.கபிலா, அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

<u>**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்**</u> :-

1. கடந்த 14.09.2020 ந் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் குடவாசல் காவல் சரகம் செம்மங்குடி மேலத்தெருவை சேர்ந்த இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 தனது வீட்டில் இருந்த



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:22 +0530

போது அங்கு வந்த இவ்வழக்கின் 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் இருவரும் வாதியை பார்த்து ஏன்டா குச்சிக்காரி தேவடியா மகனே நீ பெரிய ஆளாடா என காமகுரோதமாக திட்டியும், கிரிக்கெட் விளையாடும் ஸ்டெம்பால் அடித்து உள் காயத்தை ஏற்படுத்தியும் உன்னை கொல்லாமல் விட மாட்டேன்னு மிரட்டியும் குற்றம்புரிந்துள்ளதால் எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 294(b),352,506(1) இதச ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 294(b),352,506(1) இதச-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தன் மீதான குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார்கள். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:27 +0530

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெறும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா செம்மங்குடி கிராமத்தில் வசித்து வந்து ஜியோ டவர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது ஊரை சேர்ந்தவர்கள் என்றும், தான் ஒரு நாள் தேதி சரியாக நினைவில்லை வீட்டில் இருந்த போது கூட்டமாக சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள் என்றும், தான் என்ன சத்தம் என்று பார்க்க சென்ற போது கூட்டத்தில் யாரோ ஒருவர் தன்னை அடித்தார் என்றும், ஆஜர் எதிரிகள் அங்கு இருந்ததால் சந்தேகத்தின் பேரில் அவர்கள் மீது புகார் கொடுத்தேன் என்றும், மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா செம்மங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், அவர் தனது மகன் ஆவார் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் நடந்த போது தான் அங்கு இல்லை என்றும், சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா செம்மங்குடி கிராமத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 ஐ எனக்கு தெரியும் என்றும், அவர் தனது ஊர்க்காரரர் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் நடந்த போது தான் அங்கு இல்லை என்றும், சம்பவம் பற்றி



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:31 +0530

தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செயதும், முதற்கட்ட விசாராணை செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கமலநாதன் என்பவர் தற்போது பணி ஓய்வு பெற்று வருவதாலும், மேலும் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திருமதி. சூர்யா என்பவர் தற்போது திருவாரூர் மாவட்டம் , மாவட்ட குற்ற பிரிவில் பணிபுரிந்து தற்போது மகபேறு விடுப்பில் உள்ளதாலும் தற்போது நீதிமன்றத்திற்கு ஆஜராகி சாட்சியம் அளிக்க இருப்பதாலும், மேற்படி உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும், நீதி நலன் கருதி கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு தான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 15.09.2020 ஆம் தேதியன்று குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கமலநாதன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த பக்தவசலம் மகன் விக்னேஷ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண் 1624/2020 இதச சட்டப்பிரிவுகள் 294(b),323,506(i) ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.(**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் இவ்வழக்கினை மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே சம்பவ இடமான



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:35 +0530

வாதியின் வீட்டின் அருகே போலிசார் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ஆனந்த் மற்றும் சண்முகம் ஆகியோர்களின் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையான சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவம் உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரிகளை தேடி வந்த நிலையில் செம்மங்குடி பஸ்ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்தவர்களை கடந்த 27.09.2020 ஆம் தேதியன்று காலை 09.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படித்தியுள்ளார். பின்னர் பணி மாறுதலில் சென்றுவிட்ட படியால் இவ்வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பிலேயே வைத்து விட்டார் என்றும், பின்னர் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேற்படி உதவி ஆய்வாளர் திருமதி. சூர்யா என்பவர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கமலநாதனிடம் கூறிய அதே சங்கதிகளை மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியதால் அவர் எவ்வித மறு வாக்குமூலமும் பெறவில்லை என்றும், மேற்படி சாட்சிகளை விசாரணை செய்த வகையில் இவ்வழக்கில் காயம்பட்ட விக்னேஷ் என்பவர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வெளி நோயாளியாக சிகிச்சை எடுத்தார் என்று அவரது விசாரணையில் தெரிய வந்துள்ளது என்றும், மேலும் சம்பவ காலமான கொரோனா கால நோய் தொற்று என்ற காரணத்தினால் அவர் வாதி உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்தார் என்ற விபரத்தினை மேற்படி உதவி ஆய்வாளர் விசாரணையில் தெரிய வந்ததால் இவ்வழக்கின் இதச சட்டப்பிரிவுகள் 294(b),323,506(i) லிருந்து இதச சட்டப்பிரிவுகள் 294(b),352,506(i) ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:39 +0530

மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்றும், இத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள் 294(b),352,506(i) ன் கீழ் தண்டிக்க தக்க குற்றம் என கடந்த 06.11.2021 ஆம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:44 +0530

சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. **<u>அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்</u>**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான விக்னேஷ், கடந்த 14.09.2020 ந் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் குடவாசல் காவல் சரகம் செம்மங்குடி மேலத்தெருவை சேர்ந்த இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 தனது வீட்டில் இருந்த போது அங்கு வந்த இவ்வழக்கின் 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் இருவரும் வாதியை பார்த்து ஏன்டா குச்சிக்காரி தேவடியா மகனே நீ பெரிய ஆளாடா என காமகுரோதமாக திட்டியும், கிரிக்கெட் விளையாடும் ஸ்டெம்பால் அடித்து உள் காயத்தை ஏற்படுத்தியும் உன்னை கொல்லாமல் விட மாட்டேன்னு மிரட்டியும் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா செம்மங்குடி கிராமத்தில் வசித்து வந்து ஜியோ டவர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது ஊரை சேர்ந்தவர்கள் என்றும், தான் ஒரு நாள் தேதி சரியாக நினைவில்லை வீட்டில் இருந்த போது கூட்டமாக சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள் என்றும், தான் என்ன சத்தம் என்று பார்க்க சென்ற போது கூட்டத்தில் யாரோ ஒருவர் தன்னை அடித்தார் என்றும், ஆஜர் எதிரிகள் அங்கு இருந்ததால் சந்தேகத்தின் பேரில் அவர்கள் மீது புகார் கொடுத்தேன் என்றும், மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், ஆஜர்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:48 +0530

எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3-ம் பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில் அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றவாளி என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும், இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு கு.வி.மு.ச பிரிவு 320-ன் கீழ் ஒரு மனுவினை தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த சமாதான மனுவில் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துள்ளதையும் காணமுடிகிறது.

16. இந்நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *Madan Mohan Abbot* **Vs** *State of Punjab reported in (2008) 4 SCC 582 : (2008) 2 SCC (Crl.) 464* என்ற வழக்கில் வழங்கியுள்ள



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:52 +0530

முன்தீர்ப்பில் பத்தி 5-ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும், எதிரியுடன் சமாதனமாக செல்லும்போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு :

> *“….We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law.”*

17. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. எனவே, இவ்வழக்கில் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 294(b),352,506(1) இதச-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:13:57 +0530

எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**உத்தரவு**

19. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 294(b),352,506(1) இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:14:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. விக்னேஷ் |

| | |
|---|---|
| அ.சா.2 | திருமதி. தமிழ்செல்வி |
| அ.சா.3 | திரு. சண்முகம் |
| அ.சா.4 | திரு. ரவி-காவல் உதவி ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 15.09.2020 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 26.03.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 15.09.2020 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | 15.09.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 15.09.2020 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 15.09.2020 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.7 | 06.11.2021 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**:- இல்லை

**<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்</u>**:- -

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:14:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**<u>வழக்கு சுருக்கம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | - |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 12.12.2025 |

<table>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள்</td><td colspan="3">23.03.2026</td></tr>
<tr><td>4.</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td colspan="3">எதிரி தரப்பில் BNSS பிரிவு 348-ன் கீழ் 26.03.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="5">5.</td><td rowspan="5">சாட்சிகள் விசாரணை</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW-1 :</td><td>24.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW-2 :</td><td>24.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW-3 :</td><td>24.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW-4 :</td><td>26.03.26</td><td>26.03.26</td></tr>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">26.03.2026</td></tr>
<tr><td>7.</td><td>எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விபரம்</td><td colspan="3">-</td></tr>
<tr><td>8.</td><td>மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள்</td><td colspan="3">-</td></tr>
</table>

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:14:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.